**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| IA. 154/2018 in HMOP. No. 11/2015 | | | |
|---|---|---|---|
| Name | உஷா (எ) லோகநாயகி | Religion | இந்து |
| Husband's Name: | சீனிவாசன் | Caste | |
| Village: | மைலம்பட்டி | Calling | இல்லத்தரசி |
| Taluk: | சங்ககிரி | AGE | 31 |

Date: 10.12.2019 – PW-1

மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த மனுவை எனக்கு சீதனமாக கொடுத்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை திருப்பிக் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு முன்பேயே சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சமூக பாதுகாப்பு அலுவலரிடம் அளித்த மனுவின் பேரில் சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 முன்பாக DVC.மனு எண். 3/2014 ஆன தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ஆமாம். மேற்படி மனுவில் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள எனக்கு சீதனமாக கொடுத்த பொருட்கள், நகைகள், பணம் இருப்பதாகவோ, அவற்றை திருப்பிக் கேட்டு பரிகாரம் கோரவில்லை என்றால் ஆமாம். ஆனால் கொடுத்திருப்பதாக சொல்லியுள்ளேன். இந்த மனுவின் 3 வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்கள் அடங்கிய பட்டியலை மேற்படி DVC.மனு எண். 3/2014 ல் பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றின் பட்டியல் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் ஆமாம். இந்த மனுவானது 2015 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த சமயத்தில் தாக்கல் செய்யப்பட்ட HMOP. No. 11/2015-க்கான எதிருரையில் அவ்வாறு எனக்கு கொடுக்க வேண்டிய பொருட்கள், நகைகள், பணம் உள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று தாக்கல் செய்துள்ள மனு எண். 82/2017 லும் அவ்வாறு எனக்கு கொடுக்க வேண்டிய பொருட்கள், நகைகள், பணம் உள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பொருட்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன். பட்டியலிட்டு சொல்லவில்லை. அதேபோல் இந்தா மனுவில் இடைக்கால் ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்த மனு எண். 102/2015 விலும் அவ்வாறு எனக்கு கொடுக்க வேண்டிய பொருட்கள், நகைகள், பணம் உள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் விசாரணை ஆரம்பிக்கும்போதுதான் இந்த மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லையென்றாலும், அதனால்தான்

வழக்கின் விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே இந்த வகையிலும், பல வகையிலும் மனுக்கள் தாக்கல் செய்து வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த மனு பத்தி எண்.4 ல் எதிர்மனுதாரருக்கும், கீதா என்ற பெண்ணுக்கும் தொடர்பு இருப்பதாக சொல்லியுள்ள சங்கதிகளும் அது தொடர்பாக தெரிவித்துள்ள சங்கதிகளும் பொய்யானவை என்றாலும், எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லையென்ற காரணத்தால் எதிர்மனுதாரர் மீது தொடர்ந்து பொய்யான குற்றச்சாட்டுக்களை சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. சீர்வரிசை பொருட்களான பீரோ, கட்டில், நகை, மிக்ஸி, கிரைண்டர், பாத்திரங்கள், பிரிட்ஜ் ஆகியவை வாங்கியதற்கான பில்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பில்கள் எதுவும் இல்லை. திருமணத்திற்கு மொய்யாக வந்த பொருட்களானது டைரியில் குறித்து வைக்கப்பட்டுள்ளது. மனுத்தாக்கல் செய்த போது டைரியை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் எதிர்மனுதாரரை பிரிந்து சென்றபோது எனக்கு சீர்வரிசையாக கொடுத்த பொருட்களை எடுத்துச் சென்று விட்டேன் என்றாலும், எனக்கு சீர்வரிசையாக என்னென்ன பொருட்கள் வந்தது என்ற விவரம்கூட எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. பொய்யான சங்கதிகளுடன் இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd/- Usha @ Loganayaki

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**